**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR THE PROPOSED MULTI COLOUR GRANITE QUARRY MINING PROJECT OVER A EXTENT OF 46.07.0 HECTARES BY M/S. TAMILNADU MINERALS LIMITED AT S.F.NO.311 (PART), RAJAKKAL VILLAGE, PERNAMBUT TALUK, VELLORE DISTRICT ON 13.09.2023 AT 11.00 A.M. IN M/S. M.G MAHAL, NEAR AZHINJIKUPPAM BUS STOP, RAJAKKAL VILLAGE**

**Present :**

1. Thiru.K.Kumaravel Pandian, I.A.S - District Collector, Vellore District

2. Thiru G. Ravichandran, M.E - District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Vellore

And project proponent and public of 116 numbers (Attendance records is attached)

**Introduction:**

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Vellore welcomed the District Collector, Vellore, Government officials, Media, Polices and the general Public who were present in the public hearing meeting for the proposed a Multicolour Granite Quarry Mining Project at S.F.No.311 (Part), Rajakkal village, Pernambut Taluk, Vellore District by the M/s. Tamilnadu Minerals Limited and he also explained about the Environmental Impact Assessment Notifications, 2006 issued by Ministry of Environment, Forest and Climate Change, Government of India and the need for conducting Public Hearing for the proposed project.

He further explained that as the proposed project of mining activity is falls under the activities listed under the Schedule of the Environmental Impact Assessment Notifications, 2006 and it is necessary to conduct public hearing for the proposed project.

He further informed that public notice for the conduct of public hearing for the project was published in the dailies of “Dhinathandhi” and “Indian Express” on 11.08.2023. Based on that public hearing meeting is currently being held under the chairmanship of the Hon'ble District Collector.

He further informed that the project proponent will explain about their proposed project and environmental impact study and mitigation measures to be carried out through a power point presentation. After the presentation, the public can express their views, suggestions and comments regarding the project by informing their name, father's name and place so that all these are video graphed and send to Authority for necessary action.

He also informed that the whole process of public hearing including the views, suggestions and comments given by the public will be recorded through videography and the same will be sent to the State Environmental Impact Assessment Authority for taking necessary action.

The District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Vellore requested The District Collector, Vellore District to inaugurate the public hearing.

**District Collector, Vellore District:**

The District Collector, Vellore has informed that the meeting has been held here on behalf of M/s. Tamil Nadu Mineral Limited. Further he explained that they have already cut colour granite from the Rajakal village. It has been stopped earlier for certain reasons. Now the project was again proposed to execute by reducing its area from 72 hectares to 46 hectares. The proposed project will be implemented by the government, 40 - 50 people are likely to get employment per day, so keeping all this in mind, the general public can ask if they have any objections or doubts after the Project proponent's representative explained about their proposed project details.

The representative of Project proponent, Thiru E.Ganesan, gave the detail presentation regarding the activities of M/s. Tamilnadu Minerals Limited and the proposed mining activities in S.F.No.311 (Part), Rajakkal village, Pernambut Taluk, Vellore District with the details of surveys carried out with respect to air quality, surface and ground water quality, noise survey in the proposed project area and its surroundings. He also explained about the expected impacts in Environments with the remedial measures proposed for the same. Further he explained about the requirement of water and power for the project. He also gave an explanation about the cost of operation and the old method implemented in the quarry and the new method of quarrying granite stones. Then, he informed that the benefit of the project is bringing foreign exchange to the government.

Finally, he requested the public to ask questions or offer their views and suggestions.

The District Collector, Vellore requested the public to offer their views, objections, suggestions if any for recording.

Subsequently, people expressed their views orally one by one as follows -

**Thiru. V. Selvaraj, Melkuppam**

Thiru. Selvaraj stated that the forest in the proposed project area is an important place for grazing of goats and cows and there are no other places and therefore he is against this project

**Thiru. Ramesh, Melkuppam**

Thiru. Ramesh stated that someone comes from our town to work on this project, he died in the project area, nobody cares about it. This was happened twice in that village. Hence, we are bringing it to the attention of the District Collector for necessary action.

**Thiru. K.Venkatesan, Rajakkal**

Thiru K.Venkatesan stated that the grazing animals like cow, goat will get affect due to the proposed project comes under the forest area. He also explained that more than 15 bore wells located around the hill which is the main the source of drinking water for 5 villages which also fills 5 lakes during rainfall seasons. Further he informed about the possibility of drinking water scarcity in this area due to the proposed project.

The District Collector, Vellore informed that the public opinions have been accepted and the public shall submit their request in written petitions. He also informed that the officials will give an explanation if there are any doubts. Finally, he informed that all your opinions and petitions will be submitted to Authority for necessary action.

**Thiru. Arun, Azhinjilkuppam**

Thiru Arun stated that all the farmers in the surrounding area will be affected due to change in ground water levels. He also explained that 5-6 panchayats were benefiting water source from this hill, hence 5 panchayats are strongly opposing this project.

**Thiru. Gejaraj, Journalist**

Thiru Gejaraj stated that there was a case in the Supreme Court, in 1991 its judgment stated as that hazardous industries should not be located within 1 km of rivers. It should be noted that Malataru located within 750m from the proposed project area. He questioned why the details of the public heeting meeting intimation was not communicated through Tandora. He also said that the roads in the area are only about 10 feet width and there is no information on control measures for noise pollution.

**Thiru V.Selvaraj, Melkothakuppam**

Thiru V. Selvaraj stated that the proposed project will affect the power line on the side of the hill and also it will affect peaceful life of the people. Hence, the village people were against this proposed project.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Vellore offered vote of thanks and informed that all the views and opinions offered by the people attended in this meeting will be recorded in the proceedings and will be submitted to Authority for necessary action.

The meeting comes to an end.

**District Environmental Engineer**
**Tamil Nadu Pollution Control Board**
**Vellore**

12/9/23
**District Collector**
**Vellore District**

5

**வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு வட்டம், ராஜக்கல் கிராமம், புல எண். .311 (பகுதி), 46.07.0 ஹெக்டர் பரப்பளவில், தி/ள் தமிழ்நாடு மினெரல்ஸ் லிமிடெட் நிறுவனத்தால் உத்தேசிக்கப்பட்டுள்ள மல்டி கலர் கிரனைட் குவாரி சுரங்க திட்டம் தொடர்பாக 13.09.2023 அன்று காலை 11 மணியளவில் ராஜக்கல் கிராமம் அழிஞ்சிகுப்பம், பேருந்து நிலையம் அருகில் உள்ள தி/ள். எம்.ஜி. மஹாலில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் குறிப்புகள்:**

கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள்

1. திரு. கு.குமரவேல் பாண்டியன் – மாவட்ட ஆட்சியர் அவர்கள், வேலூர் மாவட்டம்

2. திரு. கு. இரவிச்சந்திரன் – மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், த.நா.மா.க.வா. வேலூர் மாவட்டம்

தொழிற்சாலை பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் வேலூர் மாவட்டம் – 116 எண்ணிக்கைகள் (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது)

கருத்து கேட்பு கூட்டம் தொடர்பான அறிமுகம் – மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், வேலூர் மாவட்டம்

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், த.நா.மா.க.வா, வேலூர் மாவட்டம் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை தந்துள்ள மாவட்ட ஆட்சியர் அவர்கள், காவல்துறை, ஊடகத்துறை மற்றும் திட்டத்தினை குறித்து விளக்க வந்துள்ள தொழில்துறையினர் மற்றும் பொதுமக்கள் கருத்து தெரிவிக்க வந்திருக்கும் அனைவரையும் வரவேற்றார். மேலும் அவர் மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் வெளியிடப்பட்டுள்ள சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கைகள், 2006 மற்றும் பொதுமக்கள் கருத்து கேட்டு கூட்டம் பற்றி விளக்கினார்.

தி/ள் தமிழ்நாடு மினெரல்ஸ் லிமிடெட், தமிழ்நாடு அரசு நிறுவனமானது ராஜக்கல் கிராமம் சர்வே எண். 311 (பகுதி) பேர்ணாம்பட்டு வட்டம் வேலூர் மாவட்டத்தில் வண்ண கற்கள் வெட்டி எடுப்பதற்காக 46.07 ஹெக்டர் அளவு வெட்டி எடுப்பதாக உத்தேசிக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயார் செய்யப்பட்டு உள்ளது. அதன் ஒரு பகுதியாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்தப்பட வேண்டியது கட்டாயமாகும்.

இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் தொடர்பான பொது அறிவிப்பானது 11.08.2023–ல் தினத்தந்தி மற்றும் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில் அறிவிப்பு வெளியிடப்பட்டது அதனடிப்படையில் தற்போது இந்த கூட்டமானது மரியாதைக்குரிய

மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது எனத் தெரிவித்தார்

மேலும், அவர் கூறுகையில், இந்த திட்டங்கள், செயல்பாடுகள், அதனால் ஏற்படும் பாதிப்பு, அந்த பாதிப்பை குறைப்பதற்கான நடவடிக்கைகள் எவ்வாறு எடுக்கப்படுகின்றன என்பது குறித்து தொழில்துறையினர் விரிவாக காணொலி காட்சி வாயிலாக எடுத்துரைப்பார்கள் அதன்பின் பொதுமக்கள் தங்கள் கருத்துக்கள், ஆலோசனைகள் மற்றும் கேள்விகளை ஒவ்வொருவராக தங்கள் பெயர், ஊர், தகப்பனார் பெயரை குறிப்பிட்டு கருத்துக்களை தெளிவாக தெரியப்படுத்த வேண்டும். மேலும் இங்கு நடைபெறும் அனைத்து நிகழ்வுகளும் வீடியோவாக பதிவு செய்யப்பட்டு சுற்றுச்சூழல் ஆணையத்திற்கு அவர்களின் பரிந்துரைக்காக அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவித்தார்.

அதன்பின் அவர், மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களை கருத்து கேட்பு கூட்டத்தினை தொடங்கி வைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

மாவட்ட ஆட்சி தலைவர், வேலூர் மாவட்டம் :

அனைவருக்கும் காலை வணக்கம், தமிழ்நாடு கனிம வளத்தின் சார்பாக இங்கு கூட்டம் கூட்டப்பட்டுள்ளது இதன் காரணம் ஏற்கனவே ராஜக்கல் கிராமத்தில் உள்ள மலையில் கலர் கிரானைட் வெட்டி எடுத்து இருக்கிறார்கள். இடையில் அது நிறுத்தப்பட்டுள்ளது திரும்பவும் அதன் அளவை 72 ஹெக்டர் to 46 ஹெக்டர் ஆக குறைத்து எடுப்பதற்கு பொதுமக்களுக்கு எதாவது ஆட்சேபனை இருக்கிறதா என்பதை தெரிந்துகொள்ள இந்த கூட்டத்தைக் கூட்டி இருக்கிறார்கள். ஆகவே இது முழுவதும் அரசாங்கம் செயல்படுத்துகிறது. ஒரு நாளைக்கு 40 – 50 பேர் வேலைவாய்ப்பு பெறுவதற்கு வாய்ப்புண்டு, ஆகவே இதையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு இந்த திட்டத்தை குறித்து நிறுவன பிரதிநிதி எடுத்துரைப்பார்கள். அதற்கு பிறகு பொது மக்களுக்கு ஏதாவது ஆட்சேபனைகள், சந்தேகங்கள் இருந்தால் கேட்கலாம் நன்றி எனத் தெரிவித்தார்.

தொழில்துறையினர்:

இதை தொடர்ந்து, தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் பிரதிநிதி, திரு. E. கணேசன் அவர்கள், பொதுமக்கள் கருத்து கூட்டத்திற்கான அறிவிப்பு தின இதழ்கள், போஸ்டர்கள் மற்றும் ஒலிபெருக்கி மூலம் பொதுமக்களுக்கு தெரிவித்ததாக கூறினார். தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்தும் ராஜக்கல் கிராமம் சர்வே எண். 311 (பகுதி) பேர்ணாம்பட்டு வட்டம் வேலூர் மாவட்டத்தில் வண்ண கற்கள் வெட்டி எடுப்பதற்காக திட்டம் குறித்து விரிவாக கூறினார். மேலும் ஏற்கனவே ராஜாக்கள் கிராமத்தில் நடைபெற்று வந்த வண்ண கிரானைட் திட்டம் நிறுத்தப்பட்ட காரணம், இத்திட்ட செயல்பாட்டின் மதிப்பு, சுரங்க தளத்தின் சுற்றுச்சூழல் விபரங்கள், இத்திட்டத்தினால் எதிர்நோக்கும் தாக்கங்கள் மற்றும் அதன் தடுப்பு நடவடிக்கைகள் பற்றியும் எடுத்துரைத்தார், இத்திட்டத்திற்கான நீர், மின் தேவை மற்றும் பயன்பாடு குறித்தும் தெரிவித்தார். மேலும் இத்திட்ட செயல்பாடு

செலவினங்கள் குறித்தும், குவாரியில் செயல்படுத்தப்பட்ட பழைய முறை மற்றும் தற்போது செயல்படுத்தும் புதிய முறை கிரானைட் கற்களை வெட்டி எடுப்பது குறித்தும் விளக்கமாக தெரிவித்தார். பின்பு இத்திட்டத்தின் பயனாக அரசிற்கு அன்னிய செலாவணி ஈட்டித் தருகிறது என்பதை தெரிவித்தார். இறுதியாக பொது மக்களிடம் தங்களுடைய ஐயப்பாடுகள் கேள்விகள் கருத்துக்களை கேட்கலாம் அதற்கு பதில் அளிக்க தயாராக இருப்பதாக தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சி தலைவர், வேலூர் மாவட்டம் :

இதை தொடர்ந்து மாவட்ட ஆட்சி தலைவர் அவர்கள் பொதுமக்களிடம் சந்தேகங்கள் தடை முக்கியமான கருத்துக்கள் சந்தேகங்கள் தடை இருப்பின் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

அதன்பின், பொதுமக்கள் ஒவ்வொருவராக தங்கள் கருத்துக்களை பின்வருமாறு தெரிவித்தார்கள்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் பொதுமக்கள் தங்களின் கருத்துக்களை எழுத்துப்பூர்வமாகவும் தெரிவிக்கலாம் என கூறினார்.

திரு. V. செல்வராஜ், மேல்குப்பம்:

திரு. ராமகிருஷ்ணன் அவர்கள், தங்கள் ஊர் பகுதியில் இந்த காடு இருக்கிறது. இந்த காடு ஆடு, மாடுகள் மேய்வதற்கு முக்கிய இடமாக இருக்கிறது வேறு இடங்கள் இல்லை இதனால் இந்த திட்டத்தை நாங்கள் எதிர்க்கிறோம் எனத் தெரிவித்தார்.

திரு. S. ரமேஷ், மேல்குப்பம்:

இத்திட்டத்தில் வேலை செய்வதற்காக எங்கள் ஊரிலிருந்து யாரேனும் வருகிறார்கள். அவன் இறந்து விடுகிறான் இதனை யாரிடம் கூறினாலும் கண்டுகொள்வதில்லை இது இரண்டு முறை நடந்து இருக்கிறது. இதற்கு என்ன நடவடிக்கை எடுக்கிறீர்கள் என்பதை மாவட்ட ஆட்சி தலைவர் கவனத்திற்கு கொண்டு வருகிறோம் எனத் தெரிவித்தார்.

திரு K. வெங்கடேசன், ராஜக்கல் கிராமம்

ராஜாக்கல் ஊராட்சியில் 311 சர்வே எண்–ல் மலை அமைந்துள்ளது. எங்கள் ஊராட்சியிலுள்ள கால் நடை ஆடு, மாடுகள் மேய்ப்பதற்காக உள்ளது. தாங்கள் இத்திட்டத்தினை செயல்படுத்தினால் ஆடு, மாடுகள் வைத்துள்ள விவசாய குடும்பங்கள் பாதிக்கப்படும். குடிநீர் ஆதாரம் அந்த மலையை சுற்றி 15 ஆழ்துளை கிணறுகளுக்கு மேல் உள்ளது இதுவும் பாதிக்கப்படும் மழைநீர் பெய்தால் 5 ஏரிகள் நிரம்புகிறது. அந்த நீர் ஆதாரமும் இல்லாமல் போகும். எனவே வருங்காலத்தில் இப்பகுதியில் குடிநீர் கட்டுப்பாடு

ஏற்படும் என்பதை மாவட்ட ஆட்சி தலைவருக்கு விளக்கம் கூறி இந்தத் திட்டத்தை நாங்கள் எதிர்கிறோம் என்பதை பதிவு செய்கிறோம் எனத் தெரிவித்தார்.

இதை தொடர்ந்து மாவட்ட ஆட்சி தலைவர் அவர்கள் உங்கள் கருத்துகள் அனைத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டது எழுத்து பூர்வமாக விளக்கத்தை கொடுத்து விடுங்கள். சந்தேகங்கள் இருப்பின் கேட்குமாறு அதிகாரிகள் விளக்கம் கொடுப்பார்கள் உங்களின் கருத்துக்களை பரிசீலனை செய்வதற்காக அரசாங்கத்திற்கு அனுப்பி தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

<u>திரு K. அருண் அழிஞ்சிகுப்பம் கிராமம்</u>

இந்த மலையால் அனைத்து மக்களும் பயன்பெற்று கொண்டு இருக்கிறார்கள். இதனால் விவசாய பெருமக்கள் பாதிக்கப்படுவார்கள் சுற்று வட்டாரத்தில் உள்ள அனைத்து குடிநீர் நிலைகளும் பாதிக்கப்படும் இந்த மலையினால் 5 – 6 ஊராட்சிகள் பயனடைந்து வருகின்றன இத்திட்டத்தை வலிமையாக 5 பஞ்சாயத்துகளும் எதிர்க்கிறது எனத் தெரிவித்தார்.

<u>திரு. செஜராஜ், பத்திரிக்கையாளர்</u>

Supreme Court – ல் ஒரு வழக்கு இருப்பதாகவும், 1991 – ல் வழக்கு நடந்து தீர்ப்பில் ஆறுகளை சுற்றி 1 km தூரத்தில் அபாயகரமான தொழிற்சாலைகளை வைக்கக் கூடாது என்றனர். 3/4 km – ல் மலட்டு ஆறு இருக்கிறது இந்த குவாரி அருகில் உள்ளது. ஏன் தண்டோரா மூலம் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கான விபரங்களை அறிவிக்கவில்லை என கேள்வி எழுப்பினார். இப்பகுதியில் 10 அடி அகலத்தில் மட்டுமே சாலைகள் உள்ளதாகவும் ஒலி மாசுவை எப்படி கட்டுப்படுத்துவது இது போன்ற தகவல்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பதையும் தெரிவித்தார்

<u>திரு V. செல்வராஜ், மேல்கொத்தகுப்பம்</u>

மலை பக்கத்தில் Power Line உள்ளது அதற்கு பாதிப்பு ஏற்படும் இதனால் மக்களின் நிம்மதியான வாழ்க்கை பாதிக்கப்படும். இந்த திட்டத்தை நாங்கள் எதிர்க்கிறோம் எனத் தெரிவித்தார்.

அதன்பின் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், த.நா.மா.க.வா, வேலூர் மாவட்டம் அவர்களின் நன்றியுரை அளித்ததுடன் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டமானது நிறைவுக்கு வந்தது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
த.நா.மா.க.வா, வேலூர் மாவட்டம்

13/9/23
மாவட்ட ஆட்சி தலைவர்,
வேலூர் மாவட்டம்